மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதற்காகத்தான் வர இருக்கும் நிதியாண்டில் 696 ஹெக்டர் பரப்பளவில் புளிய மரங்களை வளர்ப்பதற்கான திட்டம் இருக்கிறது என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னால் அது பற்றிப் பரிசீலிக்கப் படும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : புளிய மரங்களை அதிகம் பயிரிட அரசுக்கு உத்தேசம் இருப்பதாகச் சொன்னார்கள். ஏற்கனவே நெடுஞ் சாலையில் இருக்கக்கூடிய பல புளிய மரங்கள் பலரால் வெட்டப்படுகின்ற நிலையும், ரோட்டை விஸ்தரிப்பதற்காக, உயர்த்துவதற்காக என்ற காரணங் களால் வெட்டப்படுகின்ற நிலையும் புளிய மரத்தை அதிகப்படுத்தும் திட்டம் அல்லவே. இது குறித்து அரசின் நிலை என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தவிர்க்க முடியாத காரணத்தால் ரோட்டை விஸ்தரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் இருக்கின்ற மரங்களை வெட்டித்தான் ஆகவேண்டும்.

திரு. கு. இராசமாணிக்கம் : புளிய மரம் குறைந்த காலத்தில் பலன் அளிக்கிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நிலைத்து நிற்கிறது. இன்றைய தினம் பஞ்சாயத்துகளுக்கு வருவாய் இல்லாத நிலையில் கிராமப் பஞ்சா யத்துப் புறம்போக்குகளிலும் சாலை மருங்கிலும் புளிய மரங்களை வைத்து பஞ்சாயத்துகளுக்கு வருமானத்தைத் தேடித் தர அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : புளிய மரங்களை அதிகமாக வளர்க்க வேண்டுமென்பது நல்ல திட்டந்தான். ஒவ்வொரு ஆண்டுத் திட்டத்திலும் இதற்காக எவ்வளவு நிதி ஒதுக்க முடிகிறதோ அந்த அளவுக்கு வளர்க்கப் படுகிறது. அதையொட்டித்தான் வர இருக்கிற ஆண்டில் 696 ஹெக்டரில் வளர்க்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

Rosewood cultivation

* 198 *Q.*—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(*a*) whether Rosewood is cultivated in this State;

(*b*) if so, the details thereof; and

(*c*) the incentives offered for the cultivation of Rosewood?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ, இ & உ) ஆம். இம்மரங்கள் முதிர்ச்சி அடைவதற்கு 120 ஆண்டுகள் வரை ஆவதால், அதிக அளவில் வனத்துறையில் இவைகளை வளர்க்கவில்லை. ஆனால் இம்மரங்களுக்கு, இப்பொழுது, வெளிநாடுகளில் அதிகத் தேவை இருப்பதால், தற்பொழுது அதிக அளவில் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மரங்களை வளர்ப்ப தற்கு 120 ஆண்டுகள் வரை ஆவதால், தனிப்பட்டவர்களுக்கு ஆர்வம் இல்லை. ஆகவே எவ்வித ஊக்கமும் கொடுப்பதற்கு வகையில்லை.

திரு. என். கிட்டப்பா : நூக்க மரங்களை ஊக்கமுடன் வளர்க்க தஞ்சை மாவட்டத்திற்கு அரசு ஏதேனும் சலுகை கொடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : முன்பு நூக்க மரத்திற்கு அதிகம் கிராக்கி இல்லாத காரணத்தால் தனித் திட்டமாக கவனிக்கப்படவில்லை. ஆனால் சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் வெளிநாட்டுச் சந்தையில் இது அதிக அளவில் விலை போவதாகக் குறிப்பு இருக்கிறது. சென்ற ஆண்டு 25 லட்சம் ரூபாய் அளவுக்கு இங்கிருந்து இந்த மரங்கள் விற்கப்பட்டிருக்கின்றன. அதையொட்டி இந்த ஆண்டு புதிய திட்டம் வகுக்கப்பட்டு மேலும் அதிக அளவுக்கு இந்த நூக்க மரங்களைப் பயிரிடத் திட்டம் இருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, rosewood tree is a very costly tree and there are a number of such trees in Hosur and Denkanikottah forest and also in the forests of Mysore State. Each tree costs thousand of rupees. There is a lot of demand for the same in foreign countries and also in other parts of our own country. So, will the Hon. Minister for Commercial Taxes instruct the officers to plant more such trees in places where they grow well.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : வன இலாகாவில் ஒவ்வொரு வகை மரங்களை வளர்க்கவும் ஆண்டுத் திட்டங்களில் குறிப்பிட்ட அளவு நிதி ஒதுக்கப்படுகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு எந்த அளவுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவுக்குப் பயிரிடப்படும். அதற்கு மேல் அதிக அளவில் வளர்க்கும் திட்டம் இல்லை.

1975 மார்ச் 5]

திரு. தொ. ப. சினிவாசன் : வட ஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலையில் சந்தன மரக் காடுகள் அதிகமாக இருக்கின்றன. தூக்க மரங்களும் பயிரிட வாய்ப்பு இருக்கிறது. அங்கு தூக்க மரங்களை வளர்க்க சிறப்புத் திட்டம் அமல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தூக்க மரங்களை எந்த எந்த இடங்களில் வளர்ப்பது என்பது திட்டத்தை நிறைவேற்றும்போது பரிசீலிக்கப் படும்.

விரைவுப் பேருந்துகளில் கம்பியில்லாச் செய்திக் கருவிகள்

* 199 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசினால் நடத்தப்படும் நெடுந்தூர எக்ஸ்பிரஸ் பஸ்களில் வயர்லெஸ் கருவிகள் வைக்க அரசிடம் செயற்குறிப்பு யாதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) ஏதாவது ஒரு பகுதியில் ஓடும் விரைவுப் பேருந்துகளில் எடுத்துக் காட்டாக, சென்னைக்கும் திருச்சிராப்பள்ளிக்கும் அல்லது சென்னைக்கும் மதுரைக்குமிடையே ஓடும் விரைவுப் பேருந்துகளில் கம்பியில்லாச் செய்திக் கருவிகளைப் பொருத்துவது என்றும் இதனைச் சோதனை ஏற்பாடாகக் கொண்டு, பின்னர், மாநிலத்திலுள்ள பிற பகுதிகளுக்கும் நீட்டிப்பது என்றும் கருதப்பட்டுள்ளது.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : இந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப் படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது சம்பந்தமாக ஏற்கெனவே கர்நாடக மாநிலம் பெங்களூரில் உள்ள பாரத் எலக்ட்ரானிக்ஸ் என்ற நிறுவனத்தோடு பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஒரு பஸ்ஸில் ஒயர்லெஸ் செட் வைக்க எவ்வளவு செலவாகும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய விவரங்கள் இனிமேல் முடிவு செய்யப்பட வேண்டிய ஒன்று.